**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்குகள் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வருமானத் தலைப்பு 3-41 இற்குரிய மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 313,000 தொகையாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் உரிய பேரேட்டுக் கணக்கில் அந்த வருமானம் ரூபா 58,000 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,200,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் மூலதனப் பெறுமதி, சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு குத்தகைக் கம்பனிக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய ரூபா 2,798,740 தொகையான தொங்கல் வட்டி குத்தகைக் கம்பனிக் கணக்கில் செலவு வைப்பதன் மூலம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

10 கணக்கு விடயங்களுக்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,057,005 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,367,728 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 8,689,277 ஆகும். அந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து பேரேட்டுக் கணக்குகளில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் 2005 யூன் 08 ஆந் திகதிய 1396/18 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதி | வைத்திய அறிக்கை சமர்ப்பிக்காது கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத 07 உறுப்பினர்களுக்காக ரூபா 65,000 தொகையான படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை - 1992 | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | 1988 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 3,180,527 கூட்டுத்தொகையானது தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 1992 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 4,637,152 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,875,311 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,267,712 ஆக இருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு மிகையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 49.6 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது. இதற்கு ஆதனவரியும் வாடகையும், பிடியாணைக் கட்டணங்களும் தண்டப் பணமும் மற்றும் ஏனைய வருமானங்களின் அதிகரிப்பும் பிரதான காரணமாக இருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 7,785 | 4,531 | 3,576 |
| வாடகை | 6,248 | 5,501 | 248 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 516 | 624 | - |
| ஏனைய வருமானம் | 2,025 | 4,319 | 4,601 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை ஒப்பீடு செய்த போது ஆதனவரி, வாடகை வருமானம் மற்றும் பிடியாணைக் கட்டணங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 42 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 66 சதவீதம் ஆன குறைவைக் காண்பித்தது.

### 2.3.3 ஆதன வரி

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்கு அறவிடவேண்டிய நிலுவை ஆதனவரி ரூபா 3,576,000 ஆக இருந்த போதிலும் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வாடகை

கைத்தொழில்வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடவேண்டிய சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள தொழில் முயற்சிகள் தொடர்பான மெய்மையாய்வு கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 19 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்திற்கு சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானப் பதிவேடு பேணப்பட்டிருந்தது.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 ஒக்தோபர் மாதம் முதல் எம்பிலிபிட்டி மாவட்ட நிதி மன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றம் மூலம் கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம், பட்டோலைகள் மூலம் இனங்காணப்பட்டு பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 ஏனைய வருமானம்**

-----------------------------

இலங்கை சுற்றுலா மேம்பாட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்டு ஹோட்டல், தங்குமிடங்களுக்குரிய ஆண்டிற்கு முன்னைய ஆண்டின் வருமானத்தைக் கருத்திற்கொண்டு அந்த வருமானத்தில் 1 சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்று 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி அறவிடவேண்டியிருந்த போதிலும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலிருந்து அவ்வாறு கட்டணம் அறவிடப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**2.3.7 தொலைபேசிக் கோபுரக் கட்டணம்**

---------------------------------------------------

தொலைபேசிக் கோபுரத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், சபை இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் V ஆவது பட்டோலையின் படி உரிய எந்தக் கட்டண அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் படி பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமிய வீதிகளை இனங்கண்டு அவற்றை சபைக்கு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வீதி எல்லைகளை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட வீதிப் பதிவேடும் சபையிடம் காணப்படவில்லை.

(ஆ) பிரதேச சபையின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 181,450 பெறுமதியான 02 மடி கணனிகள் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 19 ஆந் திகதி சபையில் காணப்படாதிருந்ததுடன் 2013 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி இரண்டு முன்னாள் தலைவர்களினால் இந்தக் கணனிகள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சபைக்குரிய நிலையான சொத்துப் பதிவேடொன்று காணப்பட்ட போதிலும் சபைக்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் அதில் உள்ளடக்கப்படாமையினால் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்களிலும் போதியளவானதும் நாளதுவரையானதுமான தகவல்கள் அந்தப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2013 இன் பொருள் மெய்மையாய்விற்கு சமர்ப்பிக்கப்படாத 67 பொருட்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 19 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,266,279 தொகையான 21 கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக உரிய ஆண்டுகளின் போது தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி விளக்கு பதிவேடொன்று முறையான பிரகாரம் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 155,155 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதியொன்று 2014 யூன் 19 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னாள் தலைவர் பதவியிலிருந்து விலகிச் செல்லும் போது அதுவரை தான் பயன்படுத்திய பீபி 9856 ஆம் இலக்க கெப் வாகனத்தை மீளக் கையளிக்காமல் 2013 திசெம்பர் 05 ஆந் திகதி முதல் 2014 சனவரி 21 ஆந் திகதி வரை 46 நாள் கால எல்லையில் 3601 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தி முறையான அங்கீகாரமின்றி தமது பொறுப்பில் வைத்திருந்தார். அந்தக் காலப் பகுதியில் வாகனம் தனிப்பட்ட பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டமையின் காரணமாக சபைக்கு அறவிடவேண்டிய நட்டத்தை மதிப்பீடு செய்து அறிவிடுவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிருவாகம்

பிரதேச சபை நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட துங்கம வாராந்த சந்தை மலசலகூட நிர்மாண வேலைக்காக ரூபா 435,443 பெறுமதியான மதிப்பீட்டின் அடிப்படையில் 03 மாத கால எல்லையில் நிறைவேற்றுவதற்காக ''மஹஆர கிராமிய சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம்'' உடன் ரூபா 420,442 பெறுமதியான உடன்படிக்கையில் 2013 மார்ச் 12 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 16 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் வெதர்சீல். நிறப்பூச்சு இரு தடவை பூசுவதற்காக ரூபா 18,763 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நிறப்பூச்சு பயன்படுத்தப்படாதிருந்தமையும் அச் செயற்பாடுகள் முறையான பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்தமையும் 2014 யூன் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்புடுத்தப்பட்டது. மேலும், இந்த மலசலகூடத்திற்காக நிரந்தர நீர் இணைப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 22 செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,844,562 நிதி ஏற்பாட்டில் எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்படாது முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 05 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளிலிருந்து 48 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை ஏனைய விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

**4.3 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

நிலுவை எரிபொருள் பட்டியலுக்காக கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டில் முத்திரைக் கட்டணப் பெறுவனவுகளில் ரூபா 628,558 தொகை நேரடியாக உள்ளராட்சித் திணைக்களத்தால் அந்த கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவுகளுக்குரிய ரூபா 361,602 தொகை கடன்கொடுத்தோர் பதிவேட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் எஞ்சிய மீதியான ரூபா 266,956 தொகைக்காக எரிபொருள் பட்டியல், ஓட்டக்குறிப்பு அல்லது கடன்கொடுத்தோர் ஒதுக்கீடுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரை தேவையான விளக்கமளித்தல்கள் கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்